61

61



8-APR 1946
MADRAS

உ
சிவமயம்.
மீனாட்சிசுந்தரேசர் துணை.

தஞ்சாவூர் ஜில்லா — மன்னார்குடி

# மீனாட்சிசுந்தரேசர் ஆலய

# வரலாறு.

இஃது
சென்னை
இந்துமத பரிபாலன சபையாரின் சுற்றறிக்கைப்படி
ஷை தேவஸ்தானத்தாரால்
வெளியிடப்பட்டது.

---

தொகுத்தெழுதியவர்
ப. இராமநாத பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்,
மன்னார்குடி.

மன்னார்குடி
...அச்சுக்கூடத்தில் பதிக்கப்பெற்றது.

1946

23:38.
2119
N46
113140



8 - APR 1946

உ

சிவமயம்.

மீனாட்சிசுந்தரேசர் துணை.

தஞ்சாவூர் ஜில்லா — மன்னார்குடி

# மீனாட்சிசுந்தரேசர் ஆலய

# வரலாறு.

இஃது
சென்னை
இந்துமத பரிபாலன சபையாரின் சுற்றறிக்கைப்படி
ஷை தேவஸ்தானத்தாரால்
வெளியிடப்பட்டது.

---

தொகுத்தெழுதியவர்
ப. இராமநாத பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்,
மன்னார்குடி.

மன்னார்குடி
பாரதி அச்சுக்கூடத்தில் பதிக்கப்பெற்றது.

1946

113140

O 213'38. 2119 2
N46

உ
சிவமயம்.
மீனாக்ஷிசுந்தரேசர் துணை.

# முன்னுரை.

---

துதி

நீலமாமிடற் றாலவாயினான்
பாலதாயினார் ஞால மாள் வரே.

ஆலயம் பரவும் அன்புடைப் பெரியீர்!

பூவுலகில் சிவதலம் நிறைந்த மண்டலமாம் சோழ மண்டலத்தில், சைவசமயாசார்யர்களால் பாடப்பெற்றன, நூற்றுத்தொண்ணூறு தலங்களாம். இஃதல்லாமல் அபிமானஸ்தலங்கள் அளவிலாதனவாம். கோயிலில்லா ஊரிற் குடியிருக்காத கொள்கையுடைய நமது முன்னோர்கள் பஞ்சபூத ஸ்தலங்கள், ஜோதிர்லிங்க ஸ்தலங்கள் முதலியவற்றைத் தினமும் நினைந்து வழிபடும் பொருட்டு அந்தந்த மூர்த்திகள் பெயரால் அளவிலாத ஆலயங்களை யமைத்து வழிபடுவாராயினார்.

இத்தகைய சிறப்புடைய ஆலயங்களில் பெரும்பாலானவை மதுரை மீனாக்ஷி சுந்தரேசராலயங்களே இப்படி இவை விளங்கக் காரணம் யாது? பரமேசுவரியாகிய பார்வதியம்மை, மதுரைப் பாண்டிய ராஜகுமாரியாய் மீனாக்ஷியென்ற திருப்பெயரோடவதரித்து, ஆட்சிபுரிந்து திக்விஜயம் செய்து. சிவபெருமானைத் தனது நாயகனாய்ப் பெற்று, தான் ஆறு மாதம், நாயகர் ஆறுமாதமுமாய் இன்னும் செங்கோல் நடத்திவரும் பெருமை வாய்ந்து ஒப்பற்ற அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய அரும் பதியாய், பஞ்ச சபைகளுள் வெள்ளியம்

பமொய், நடராஜா கான்மாறியாடிய கற்பகமாய், நடனஞ் செய்யுமிடமாய் நீதியிற் சிறந்து சங்கத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களது பழம்பதியாய், சைவம் வளர்த்த பாண்டிமாதேவி, குலச்சிறையும், உலகமுய்யப்பாண்டியன் பிழைக்க, திருஞானசம்பந்தரைக்கொண்டு வேதநெறி, சைவநெறிகளை நிலைநாட்ட வாதிலே, தேவாரத்தை நெருப்பிலிட்டும், நீரிலிட்டும், மெய்ப்பித்துச் சைவத்தை நிலைநாட்டித் திருநீறு உலகெலாம் விளங்கச்செய்த அளவிலாப் புகழுடைமையால்தான் என்பது உலகறிந்த உண்மையாகும்.

இத்தகைய வரலாறுகளை வெளியிடும்படி செய்து வரும் சென்னை இந்துமத தர்ம பரிபாலன போர்டாருக்கும், இந்த ஆலயத் தருமகர்த்தாக்களுக்கும் நன்றியுடையேன்.

இந்த அபிமான ஸ்தல வரலாற்றைக் கர்னபரம்பரை முதலிய பலவேதுக்களைக்கொண்டு தொகுத்தெழுத நேர்ந்தமையின் இதிற் காணுங் குற்றங்களைந்து. சிவனது புகழையே மதித்துப் போற்றிப் படித்து சிறியேனை மன்னித்தருள வேண்டுவன்.

அடியேனுக்குத் தோன்றாத் துணையாயிருந்து இந்நூலை வெளியிடும்படி யருள்செய்த ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர் திருவடிகளை வணங்குவோம்.

இவ்வண்ணம்,

**ப. இராமநாதன்.**

''குற்ற நீ குணங்கள் நீ கூடலாலவாயிலாய்''



திருக்கோயில் தோற்றமும், திருக்குளமும்.

# மன்னார்குடி ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசர் ஆலய வரலாறு.

**மன்னார்குடி:** நகர அமைப்பு.

**தஞ்சை ஜில்லா, மன்னார்குடி** (தாலூகா) கஸ்பா

பூமகள் திருமுகமெனத் திகழும் பரதகண்டத்தில், ஏழ்தலம் புகழ் கங்கையிற் புனிதமாய காவிரி பரந்து பாயும் சோழமண்டலத்தின் திலகமென விளங்கும் மன்னார்குடியில் படிந்தார் பாவம் போக்கும், பாம்பணி நதியின் மேல்கரையில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி செல்லும் மார்க்கத்தில் கீழப்பாலத்துக்குத் தெற்கே (அரை பர்லாங்கில்) இவ்வாலயம் அமைந்துள்ளது. இது பெரும்பாலும் மீனாட்சியம்மன் கோயில் என வழங்கும்.

**ரயில் நிலையம்**—மன்னார்குடி. தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் செல்லும் வழியின் இடையில் அமைந்துள்ள நீடாமங்கலம் ஜங்ஷனிலிருந்து பிரியும் தொடரில் எட்டாவது மைலிலுள்ளது.

**நாட்டுச்சாலைகள்:**— தஞ்சையிலிருந்து நீடாமங்கலம் வழியாய் முப்பதாவது மைலிலும், திருவாரூரிலிருந்து பதினேழாவது மைலிலும், திருத்துறைப்பூண்டியிலிருந்து பதினெட்டாவது மைலிலுமுள்ளது. மோட்டார், வண்டி முதலிய வசதிகளுடைய சாலைகள் உண்டு.

**நதி:**—பாமணியாறு என வழங்கும் பாம்பணி நதி. இந்தப் புண்ணிய நதி மன்னார்குடிக்கு ஒரு மாலையாக அமைந்ததென ஊருக்கு வடக்கிலும், கிழக்கிலுமாக ஓடுவதாகும்.

**குளங்கள்:—** (பெரிய குளம் என வழங்கும்) ஹரித்ராநதி, சங்கு தீர்த்தம், சக்கர தீர்த்தம், ருக்மணி தீர்த்தம், கிருஷ்ண தீர்த்தம், கோபிரளய தீர்த்தம், கஜேந்திரமோட்ச தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தம், (இரட்டைக்குளம் என வழங்கும்) கோபிநாதன் தீர்த்தம் முதலிய நவ தீர்த்தங்களும், வேறு பல குளங்களும் உண்டு. சிவாலயத்தின் ஈசான்யத்தில் பொற்றாமரைத் தீர்த்தம்—மீனாட்சியம்மன் கோயில் தீர்த்தம் என வழங்கும்.

## இதர கோயில்கள்.

**பெரிய கோயில்:—** ஊருக்கு மேற்கே செண்பகாரண்ய க்ஷேத்ரமென்னும் பெயரோடு விளங்கும் விஷ்ணு ஆலயம், செங்கமலவல்லித்தாயார் சமேத ஸ்ரீ ராஜகோபாலசுவாமி எழுந்தருளியிருப்பதாகும். மேலும், அண்ணாமலைநாதராலயம், நீலகண்டேசுராலயம், கைலாசநாதராலயம் (அக்கரை) ஜெயங்கொண்டநாத ராலயம், (துளசி மேடையார் கோயில்) சோமநாத சுவாமி ஆலயம், லட்சுமிநாராயணராலயம், பாலகோபாலசாமி ஆலயம், (கோணப்பெருமாள் கோயில் என வழங்கும்) கோபிநாதசாமி கோயில் முதலிய பல சிவாலய, விஷ்ணுவாலயங்களும், எட்டுத்திசைகளிலும் கிராமதேவதைகள் ஆலயங்களும் உண்டு.

## மூர்த்திகளின் பெயர் முதலியன

**மூலஸ்தானம்:—** கிழக்கு நோக்கிய மகாலிங்கம் சுந்தரேசர் சந்நிதி.

போகசக்தியம்மன்
ஆசார நந்தி பலிபீடம்
சோமாஸ்கந்தர்—சந்நிதி
அஸ்திரதேவர்

**மகாமண்டபம்:—** தெற்கு நோக்கிய சந்நிதி ஸ்ரீமீனாக்ஷியம்மன்

**தெற்குப் பிரகாரம்:—** தேவகோட்டம், நிர்த்தன கணபதி, தெட்சணாமூர்த்தி

**கிழக்குப் பிரகாரம்:—** கிழக்குநோக்கிய சந்நிதி கன்னிமூலையில்

ஸ்தல விநாயகர் இச்சந்நிதிக்கு முன்னுள்ள அதி விசேஷமான காசி வில்வவிருட்சம், தரிசித்துப் பிரதட்சணம் செய்யவேண்டியதாகும்.

பஞ்சமூர்த்தி—பிரதானகணபதி விசேஷ லிங்கம் இரண்டு.

ஸ்ரீ காசி விசுவநாதர் விசாலாக்ஷி சந்நிதி திரிகோண லிங்கங்கள்.

ஸ்ரீ வள்ளி, தெய்வானை, சுப்பிரமணியசுவாமி (ஷை சந்நிதிக்கு முன்) லிங்கோற்பவர்.

ஸ்ரீ காமாக்ஷி, ஏகாம்பரநாதர், மகாலக்ஷிமி, மகா விஷ்ணு, வீணாகான சரசுவதி.

**வடக்குப் பிரகாரம்:—** (கோமுகி) பிரமதேவர், சண்டேசர், துர்க்காம்பிகை, பத்ரகாளி (வடமுகமாக)

## உற்சவ மூர்த்திகள்.

கணபதி

சைவசமயாசார்யர்கள்:— 1. திருஞானசம்பந்தர், 2 திருநாவுக்கரசர், 3. சுந்தரமூர்த்தி, 4. மாணிக்கவாசகர்.

சந்திரசேகரர்

வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் பிரதோஷ நாயகர்

சண்டேசர்

திருப்பள்ளியறை சுவாமி இரண்டு (இதற்கு எதிரில்) நவக்ரக மண்டபம், சபாமண்டபம் தெற்கு நோக்கிய சந்நிதி ஸ்ரீ நடராஜா 2. ஸ்ரீ சிவகாமி 2, சுக்ரவார அம்மன் 1. யாகசாலை மண்டப வேதிகை முன்னர் (க்ஷேத்ர பாலர்) பைரவ நாதர். (இடதுபுறம்) சந்திரன் சூர்யன் (வலதுபுறம்)

(மூலவருக்கு முன் — முதலில்) துவஜஸ்தம்பம் மகாகணபதி. பலிபீடம்—நந்தி.

## ஆலய வரலாறு

துவாபரயுகத்தின் முடிவில், கோபில கோபிரளர் எனும் இரண்டு ரிஷிகள் துவாரகைக்குச் சென்று கண்ணனைக் கண்ணாரக் கண்டு அவன் லீலைகளைச் சேவித்து ஆனந்தமுற எண்ணி வடதிசையை நோக்கி யாத்திரை செய்தனர். ஒரு நாள் இவர்கள் நித்ய கருமங்களை முறைப்படி செய்து முடித்துத் தியானத்திலமர்ந்தனர். மனம் அப்படியே லயித்துவிடவே அனேக வருடங்கள் கழிந்தன. பிறகு கண்விழித்துத் தம் யாத்திரையை மேற்கொண்டு செல்லும் வழியில் பகவானதருளால் நாரதர் எதிரே வந்தார். மகரிஷிகளைக் கண்டு அளவளாவி அவர்களது வரலாற்றை வினவ ரிஷிகளும் தம் கருத்தை வெளியிட்டனர். நாரதர், துவாபரயுகமுடிந்து, கலிபிறந்துவிட்டமையால், கண்ணன் தன் அவதாரலட்சியங்களைப் பூர்த்தி செய்துவிட்டு ஸ்ரீ வைகுண்டத்தை யடைந்துவிட்டார் என்று சொல்லியருளியதைக் கேட்ட ரிஷிகள்

மூர்ச்சையாகி வீழ்ந்தனர். நாரதர் அவர்களைத் தேற்றிய வுடன் அவ்விருவரும் நாரதரையே தொழுது "எந்த உலகத்திலும் யாராலும் செய்யமுடியாத அரிய காரியங் களை எளிதிலே செய்துமுடிக்கும் மகா முனிவரே! நீரே எமக்கு ஒரு உபாயத்தை யுபதேசித்தருளிக் கண்ணனைக் காட்டியருளவேண்டும். இல்லையேல் நாங்கள் சகிக்கமாட் டோம்" என்று முறையிட்டனர். நாரதர் மனமுவந்து "ஏ முனிவர்களே! இப்பூமண்டலத்திலே தவத்துக்குரிய பல தலங்களுண்டு. எனினும் அவற்றுள் மிகச் சிறந்தது செண்பகாரண்யம் எனும் தலம். அங்கு சென்று தவம் செய்தால் உங்களிஷ்டம் நிறைவேறும்" என்று சொல் லியபடி மகரிஷிகள் இத்தலத்துக்கு வந்து தவம் செய்து கண்ணனைச் சேவித்து மகிழ்ந்து தோத்தரித்தார்கள். கண்ணனும் அவர்கட்கு வேண்டிய வரத்தைக் கேட்கும் படி கிருபை செய்ய மகரிஷிகள் அங்கு துவாரகையில் செய்தருளிய லீலைகளிற் சிறந்தனவற்றை மறுபடியும் செய்தருளவேண்டும்என்று பிரார்த்தித்தபடி கண்ணனும் முப்பத்திரண்டு திவ்யமான காட்சிகளைத் தந்தருளினர்.

இப்படியாகத் தெரிசனம் பெற்ற மகரிஷிகள் இத் தலத்தைவிட்டகல மனமில்லாதவர்களாய், பாம்பணி நதி யின் மேல்பால் கோபிநாததீர்த்தக் கரையில் பர்ணசாலை யொன்று அமைத்து வாழ்ந்து வரலாயினர். ஒரு நாள் முன்யுகத்தில் நடந்த வடமதுரைக் கண்ணனது முப்பத்தி ரண்டு லீலைகளைத் தெரிசித்த நாம், தென் மதுரை முக் கண்ணனை சிவபெருமான் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் தவம் செய்து இத்தலத் தில் தெரிசித்து மகிழவேண்டும். என்று எண்ணினர்.

113140

நல்ல முகூர்த்தத்தில், சிவாகம விதிப்படி கோபி நாத சுவாமி ஆலயத்துக்கு ஈசான்யத்தில் கோபிநாத தீர்த்தத்துக்கு வடகரையில் பாம்பணி நதிக்குக் கீழ்கரை யில் சிவலிங்கஸ்தாபனம் செய்து சிவபூஜை செய்து வருவாராயினர்.

சிவபெருமான் இவரது தவத்திற்கிரங்கி மூலலிங்கத் திலிருந்து மீனாக்ஷியம்மையாரோடு ரிஷப வாகனத்திலே காட்சி தந்தருளினர். மகரிஷிகள் ஆனந்தபரவசராகி ஆடிப்பாடித் துதி செய்தனர். சிவபெருமான் விரும்பும் வரங் கேட்கத் திருவுளம் பற்றவே மகரிஷிகள் அறுபத்து நான்கு திருவிளையாடலையும் செய்து காட்சி தந்தருள வேண்டிக்கொண்டபடி சிவபெருமான் செய்தருளினர். பிறகு இவ்விடத்தில் மகரிஷிகள் ஆலயங்கட்டிப் பூசை முதலியனவும் நடத்திப் பிரமோற்சவமும் செய்து மகிழ்ந் தனர்.

இப்படிப் பல வருடங்கள் சென்றபிறகு இவ்வால யம் சிலமாகிவிட்டது. இந்நிலையில் இத்தலத்துக்கு வந்த சோழராஜா இத்தலாலய மகிமையை யறிந்து, திருப் பணி செய்து கும்பாபிஷேகமும் நடத்தித் தெரிசித்துப் பூதானமும் செய்தார். அந்நிலங்கள் இன்றும் சோத்திரிய கிராமமாக இருந்து வருகிறது.

இவ்வாலயத்தில் சிவாகமங்களில் சிறப்பாகச் சொல்லப்படும் பனிரண்டு மாதப் பௌர்ணமி திதிகளி லும் பனிரண்டு விசேஷ அபிஷேகமும், மூலஸ்தானத் திற்கு நடைபெற்று வருவது பெரும் சிறப்பானதால் அன்பர்கள் அவசியம் தெரிசித்து மகிழவேண்டியதாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | சித்திரை | — | மருக்கொழுந்து அபிஷேகம் |
| 2 | வைகாசி | — | சந்தனம் |
| 3 | ஆனி | — | முக்கனி (மா, வாழை, பலா) |
| 4 | ஆடி | — | பால் |
| 5 | ஆவணி | — | சர்க்கரை |
| 6 | புரட்டாசி | — | அதிரசம் |
| 7 | ஐப்பசி | — | அன்னம் |
| 8 | கார்த்திகை | — | தீபம் |
| 9 | மார்கழி | — | பசு நெய் |
| 10 | தை | — | கருப்பஞ்சாறு |
| 11 | மாசி | — | கம்பளம் |
| 12 | பங்குனி | — | பசுந்தயிர் |

## மாத உற்சவாதிகள்

(பஞ்சபருவமும்)

மாதப்பிறப்பு—சுவாமி எழுந்தருளுதல்

சதுர்த்தி—விநாயகர்

வெள்ளி—அம்மன்

பிரதோஷம்—பிரதோஷ நாயகர்

சித்திரை—மீனாக்ஷி கல்யாணம், நடராஜாபிஷேகம்.

## வைகாசி பிரமோற்சவம்

ஆனி—நடராஜாபிஷேகம்

ஆடி—வெள்ளிக்கிழமை நான்கும் விசேஷம்,
கடைவெள்ளி சந்தனக்காப்பு.

ஆவணி—பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல்,
நடராஜாபிஷேகம்.

புரட்டாசி-நவராத்ரி கொலுவிசேஷம், நடராஜாபிஷேகம்.

ஐப்பசி—கந்தசஷ்டி
கார்த்திகை—சொர்க்கபானம்
மார்கழி—நடராஜா உற்சவம்
தை—பூச உற்சவம்
மாசி—சிவராத்ரி, நடராஜாபிஷேகம்
பங்குனி—உத்திரம்

## பிரமோற்சவம்

வைகாசி சுக்கிலபக்ஷ சஷ்டியில் } கொடியேற்றம், விசாகத்தில் தீர்த்தவாரி.

**பனிரெண்டு தின உற்சவமாகும்:**— (1) கைலாச வாகனம், (2) கமல வாகனம், (3) மூஷிக வாகனம், (4) மயில் வாகனம், (5) அன்ன வாகனம், (6) ரிஷப வாகனம், (7) சந்திரசூர்யப்பிரபை, (8) காமதேனு, (9) குதிரை, (10) யானை, (11) பூதம்.

ஒன்பதாவது உற்சவம் திருத்தேர்:— ஐநூறு ஆட்கள் இழுக்கக்கூடிய அழகிய தேராகும்.

## விசேஷ ஆபரணங்கள்

கல்லிழைத்த திருக்கோரம்பம், டிகம்பர், தோடு, மகரி, கண்டாபரணம், திருமங்கல்யம் (சிறந்தவைகளாம்)

## நிர்வாகம்

சென்னை இந்துமத தர்ம பரிபாலன போர்டாரின் ஆட்சிக்குட்பட்டது.

**M. A. ராஜகோபாலய்யர்,**
மானேஜிங் டிரஸ்டி.
**R. விசுவநாதய்யர்,**
**V. S. ராஜகோபாலய்யர்,**
டிரஸ்டிகள்.



திருக்கோயில் பின்புறத்தோற்றம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருவாலவாய்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

### பண்—குறிஞ்சி

1 நீலமா மிடற் றாலவாயி லான்
பால தாயினார் ஞால மாள்வரே

2 ஞால மேழுமாம் ஆல வாயிலார்
சீலமே சொலீர் காலன் வீடவே

3 ஆல நீழலார் ஆல வாயிலார்
கால காலனார் பால தாமினே

4 அந்த மில்புகழ் எந்தை யாலவாய்
பந்தியார் கழல் சிந்தைசெய்ம்மினே

5 ஆட லேற்றினான் கூடலா லவாய்
பாடியே மனம் நாடி வாழ்மினே

6 அண்ண லாலவாய் நண்ணி னான்றனை
எண்ணியே தொழத் திண்ண மின்பமே

7 அம்பொ னாலவாய் நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே

8 அரக்கனார் வலி நெருக்க னாலவாய்
உரைக்கு முள்ளத்தார்க் கிரக்க முண்மையே

9 அருவ னாலவாய் மருவி னான்றனை
இருவரேத்த நின் றுருவ மோங்குமே

10 ஆரநாக மாம் சீரனா லவாய்த்
தேரமண் செற்ற வீரனென்பரே

11 அடிக ளாலவாய்ப் படிகொள் சம்பந்தன்
முடிவிலின்றமிழ் செடிகணீக்குமே

## திருநீற்றுப்பதிகம்

பண்—காந்தாரம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவா யான்றிரு நீறே

பண்—கௌசிகம்

காட்டு மாவதுரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடையாயுரை செய்வனுன்
வேட்டு வேள்வி செய்யா வமண் கையரை
ஓட்டிவாது செயத் திருவுள்ளமே.

செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே யஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்யராமமணர் கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே.

வீடலால வாயிலாய் விழுமியார் கணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலி நீள்கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே.

## நாலடிமேல்வைப்பு

பண்—பழம்பஞ்சுரம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே

ஞாலமே நின் புகழே மிக வேண்டுந் தென்
ஆலவாயி லுறையு மெம்மாதியே

### திருவிய மகம்

ஆலநீழ லுகந்த திருக்கையே யானபாட லுகந்த திருக்கையே
பாலினேர் மொழி யாளொருபங்கனே பாதமோதலர் சேர்புரபங்க
கோலநீறணி மேதகு பூதனே கோதிலார் மனமேவிய பூதனே [னே
ஆலநஞ்ச முதுண்ட களத்தனே யாலவாயுறை யண்டர்களத்தனே

### பண்—புறநீர்மை

மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதனாயகனால் வேதமும் பொருள்களுமருளி
அங்கயற்கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவாயாவது மிதுவே

### திருநாவுக்கரசர் தேவாரம்

### திருநேரிசை

வேதியா வேத கீதா விண்ணவரண்ணா வென்றென்
றோதியே மலர்கடூவியொருங்கி நின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ்சூடும்
ஆதியே யாலவாயிலப்பனே யருள் செயாயே.

### திருத்தாண்டகம்

முளைத்தானையெல்லார்க்கு முன்னே தோன்றி
முதிருஞ் சடை முடிமேன் முகிழ் வெண்டிங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கண் மூன்றும்
வரை சிலையா வாசுகி மாநாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தாற்றுவள நீறாத்
தூமுத்த வெண் முறுவலுமை யோடாடித்
திளைத்தானைத் தென் கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றோனானே.

திருச்சிற்றம்பலம்.

உ

## 1353ம் பசலி வரவு செலவு கணக்கு.

(போர்டார் நியமனப்படி ஆடிட்டரால் ஆமோதிக்கப்பட்டது)

| | ஏ. செ. |
|---|---|
| நன்செய் நிலம் | 229—25 |
| புன்செய் ,, | 95—84 |
| கூடுதல் நிலம் | 325—9 |

### வரவு :

| | கலம் | ம | ப | ரூ | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| நன்செய் குத்தகை வருமானம் ... | 4257 | 6 | 2½ | | | |
| நெல் வித்துமுதல் ... | 120 | 1 | 1 | 10568 | 2 | 0 |
| மனைப்பகுதி ... | | | | 133 | 8 | 6 |
| தோப்பு ஆதாயம் ... | | | | 135 | 0 | 0 |
| இதர ஆதாயம் ... | | | | 37 | 9 | 1 |
| கட்டட வாடகை ... | | | | 156 | 7 | 0 |
| உபயங்கள்—உபயக்காரர்கள் மூலம். | | | | 146 | 0 | 0 |
| உண்டியல் ... | | | | 4 | 5 | 9 |
| கடன், வட்டி ... | | | | 33 | 4 | 1 |
| பல பேர்வழி ... | 468 | 0 | 1 | 921 | 12 | 4 |
| கடன் வாங்கும் தொகை ... | 82 | 2 | 2 | 429 | 0 | 5 |
| கூடுதல்... | 4927 | 10 | 2½ | 12565 | 1 | 2 |
| ரொக்கம்... | | | | 30 | 12 | 6 |
| நெல் இருப்பு... | 1482 | 3 | 0 | | | |
| | 6410 | 1 | 2½ | 12595 | 13 | 8 |

## செலவு

| | கலம் | ம. | ப. | ரூ | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| சம்பளம் (சிப்பந்தி) ... | 353 | 6 | 0 | | | |
| ஷை ரொக்கம் ... | | | | 534 | 0 | 0 |
| போக்குவரத்து செலவு ... | | | | 25 | 15 | 0 |
| அச்சுக்கூலி சாதல்வார் ... | | | | 32 | 15 | 3 |
| பூஜை நித்தியப்படி ... | | | | 1712 | 11 | 6 |
| ஷை நெல் அமுதுபடி ... | 324 | 4 | 0 | | | |
| எறுபடிச்செலவு ... | | | | 1301 | 13 | 4 |
| மாமூல் உற்சவ உபயங்கள் ... | | | | 2132 | 2 | 9 |
| சாகுபடிச் செலவு ... | | | | 431 | 4 | 0 |
| மராமத்துச்செலவு ... | 121 | 10 | 0 | 188 | 8 | 0 |
| காய்ச்சல்பாடு வகையறா ... | 122 | 9 | 0 | | | |
| நெல் வித்துமுதல் கொள்முதல் ... | 3050 | 0 | 0 | 392 | 5 | 0 |
| ரெவின்யூ கிஸ்தி ... | | | | 1606 | 9 | 11 |
| முனிசிபல் வரி ... | | | | 55 | 4 | 2 |
| போர்டு பீஸ் ... | | | | 185 | 1 | 0 |
| கமிட்டி பீஸ் ... | | | | 185 | 1 | 0 |
| கட்டடம் பழுதுபார்த்தது ... | | | | 450 | 3 | 7 |
| வாகனம், எடுபிடி, திருவாபரணம் பழுதுபார்த்தது... | | | | 33 | 12 | 9 |
| கோர்ட் செலவு ... | | | | 195 | 0 | 0 |
| ஆடிட் பீஸ் ... | | | | 125 | 0 | 0 |
| சில்லறைச்செலவு நெல் ... | 38 | 1 | 0 | 257 | 3 | 11 |
| அன்னம் ... | 40 | 4 | 0 | 44 | 6 | 0 |
| திருவாபரணம் வெள்ளி ... | | | | 89 | 0 | 0 |
| வாகனம் ... | | | | 15 | 7 | 0 |
| பல பேர்வழி ... | 91 | 1 | 1½ | 2362 | 2 | 4 |
| வாங்கின கடன் திரும்பக்கொடுத்தது... | 25 | 11 | 1 | 67 | 1 | 0 |
| இருப்பு நெல் ... | 2242 | 3 | 0 | | | |
| ஷை ரொக்கம் ... | | | | 172 | 14 | 2 |
| ஆகக்கூடுதல்... | 6410 | 1 | 2½ | 12595 | 13 | 8 |

பாரதி பிரஸ், மன்னார்குடி.

113140

8В
98